

தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை மேம்பாலப் பணிகள் போக்குவரத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், நள்ளிரவில் மட்டும் இரும்பு உத்திரங்கள் பொருத்தும் பணியினை 13.10.2025 அன்று நள்ளிரவில் அமைச்சர் எ.வ.வேலு பணித்தளத்திற்குச் சென்று ஆய்வு செய்தார். உடன் தலைமை பொறியாளர் கு.கோ.சத்தியபிரகாஷ், தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவண செல்வம் மற்றும் ஒப்பந்த நிறுவனத்தினர் உடனிருந்தனர்.

### சென்னை, தேனாம்பேட்டை – சைதாப்பேட்டை மேம்பாலப் பணிகள்!

# நள்ளிரவில் பொருத்தப்பட்ட இரும்பு உத்திரங்கள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

*சென்னை, அக்.15-*

*சென்னை, அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அரசு திட்டமிட்டு, தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை, மேம்பாலம் கட்டும் பணியைத் துவக்கி, தற்போது, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மேம்பாலத்தில் இரும்பு உத்திரங்கள் பொருத்தும் பணிகள், போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் மேற்கொள்ள வேண்டும் என்ற அமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நேற்று முன்தினம் (13.10.2025) நள்ளிரவில் பணிகள் தொடங்கியது. அமைச்சர் அவர்கள் பணித் தளத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆலோசனைகளை வழங்கினார்.*

*3.20 கி.மீ. நீளமுடைய இந்த மேம்பாலத்தில் அடித்தளப் பணிகளும், இரும்புத் தூண்கள் அமைக்கும் பணிகளும் ஏற்கெனவே நிறைவு பெற்ற நிலையில், மேம்பாலக் கட்டுமானத்தில் மிக முக்கியமான கட்டமாக கருதப்படும் இரும்பு குறுக்கு உத்திரங்கள் (Steel Cross Girder) பொருத்தும் பணி நேற்று, நள்ளிரவில் தொடங்கியது. ஒவ்வொரு உத்திரமும் 22 டன் எடையுடையது. குறுக்கு உத்திரம் (Cross Girder) 9 டன் எடை கொண்டது.*

*ஒரு பாலக்கண்ணுக்கு (Span) 5 உத்திரங்கள் மற்றும் 2 குறுக்கு உத்திரங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு பாலக்கண்ணில் மொத்தம் 110 டன் எடையுள்ள இரும்பு கட்டமைப்பு அமைக்கப்படும். இவ்வளவு பருமனான இரும்பு உத்திரங்களை தூக்குவதற்காக 150 டன் கொள்ளளவு கொண்ட உயர்திறன் கிரேன்கள் பயன்படுத்தப்பட்டு வெற்றிக்கரமாக பொருத்தப்பட்டு வருகின்றன.*

*இப்பணிகளின் முன்னேற்றத்தை மாண்புமிகு பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நள்ளிரவில் பணித்தளத்தில் நீண்டநேரம் பார்வையிட்டார்.*

*இந்த உயர்மட்ட மேம்பாலப் பணிகள் நிறைவு பெற்றவுடன் தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை இடையேயான போக்குவரத்து நெரிசல் குறையும். வாகனங்கள் விரைவாக செல்வதுடன் பயண நேரம் குறையும்.*

*அமைச்சர் நேரடி ஆய்வின்போது, நெடுஞ்சாலைத் துறை தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு.கோ.சத்தியபிரகாஷ், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர் வி. சரவணசெல்வம் மற்றும் ஒப்பந்த நிறுவனத்தினர் உடனிருந்தனர்.*



தலைமைச் செயலகத்தில், நேற்று (14.10.2025) அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில், பொங்கல் 2026 வேட்டி சேலை வழங்கும் திட்டம்,பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் துறைச் சார்ந்த திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துறை அரசு செயலாளர், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (14.10.2025) சென்னை சைதாப்பேட்டை சட்டமன்ற அலுவலகத்தில், மண்டலம் 10 வருவாய் துறை சார்பில், சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வணிக கடன் வழங்கும் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஸ்ரீதரன் மற்றும் முன்னணியினர் உடனிருந்தனர். உடன் களக்காடி எல்லப்பன், டி.என்.சிவமணி, சை.மு.சேகர், ந.தமிழரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

### நடப்பு உலகளாவிய வர்த்தகச் சூழல் தெரியாமல்

# நடிக்கும் அன்புமணிக்கு நாம் எதையும் சொல்ல முடியாது!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கண்டனம்!

சென்னை, அக்.15-

தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா விடுத்துள்ள சமூக வலைத்தளப்பதிவு வருமாறு :-



தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு எப்போதெல்லாம் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டு நல்லது நடக்கிறதோ அப்போதெல்லாம் சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணத்தினால் அந்த வேலைவாய்ப்பில் விளையாடுவதை வாடிக்கையாக வைத்துள்ளனர். அப்படி ஒருவர் தனது குடும்பச் சண்டையில் உள்ள வன்மத்தை தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலத்தில் கொட்டித் தீர்க்கிறார்.

இன்றைய உலக அரசியல் சூழலில் ஒரு முதலீட்டை இந்தியாவிற்குள் கொண்டுவருவது எவ்வளவு கடினம் ! அதிலுள்ள Geopolitical issues என்னென்ன என்பதையெல்லாம் அறிந்துகொள்ளாமல் அரசியல் காழ்ப்புணர்ச்சி மிகுந்த சிறுபிள்ளைத்தனமான அறிக்கையை வெளியிடுவதை இனி அவர் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

நேற்று பாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் 15,000 கோடி முதலீடு செய்து 14,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்தது என்பது உறுதியான, சரியான, எந்தவிதத் தவறும் இல்லாத 100/100 உண்மையான செய்தி. இது ஏறத்தாழ ஒரு வருடப் போராட்டத்திற்கு பிறகு உறுதி ஆகியிருக்கும் வேலைவாய்ப்புகள். பல மாதங்களாக ஒரு சில ஊடகங்கள் அரசு எந்தவித MoU செய்தியையும் உறுதி செய்யாத சூழலில் அவர்களாக யூகித்து எழுதிய செய்திகளை பழைய திட்டம் என்று கூறுவது ஏற்புடையதல்ல. ஒரு திட்டம் வேலைவாய்ப்புகளாக மாறும் என்று அரசுக்கு முழுமையான நம்பிக்கை வந்த பிறகே அதை துறையோ அல்லது நானோ உறுதி செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறோம்.

நடப்பு உலகளாவிய வர்த்தகச் சூழல் தெரியாமல் யார் எதற்காக எதைச் சொல்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ளாமல், அல்லது புரிந்துகொள்ள முடியாமல், அல்லது புரிந்து கொண்டே நடிப்பவர்களுக்கு நாம் எதையும் சொல்ல முடியாது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

